குறியீட்டு எண்:

# தி.ஐ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அம்பத்தூர்

காலாண்டுத்தேர்வு- 2018

மதிப்பெண்: **90**
நேரம்: 2.30மணி

வரிசை எண்:: ……………

## பகுதி–அ

**அ) பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க**
**(செய்யுள், உரைநடை) 6x1=6**

1. தஞ்சைப் பெரிய கோயிலின் முகப்பில் உள்ள நந்தி, யார் காலத்தைச் சார்ந்தது?
   அ) சோழர்காலம் **ஆ) நாயக்கர் காலம்** இ) பல்லவர் காலம்
2. தாயுமிலி தந்தையிலி தான் தனியன் – தனியாக இருப்பவன் யார்?
   அ) முருகன் ஆ) அழகர் **இ) சிவபெருமான்**
3. இரண்டு போபுரங்களைக் கட்டும் புதியமரபைத் தோற்றுவித்தவன்
   **அ) இராசராசன்** ஆ) இராஜேந்திர சோழன் இ) இராசசிம்மன்
4. பெண்களுக்காக பாரதி எழுதிய குறள் வெண்பா இடம் பெற்ற இதழ்
   அ) இந்தியா ஆ) சுதேசமித்திரன் **இ) சக்ரவர்த்தினி**
5. ஒளியின் திசை வேகத்தை உலகிற்கு வெளிப்படுத்தியவர்
   **அ) ரோமர்** ஆ) பியரி கேசந்தி இ) ஜகதீச சந்திரபோஸ்
6. கடிகை முத்துப் புலவரின் மாணவர் யார்?
   **அ) உமறுப்புலவர்** ஆ) பனு அகமது மரைக்காயர் இ) பாரதியார்

**ஆ) குறுவினா எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி (செய்யுள்)**
**3x2=6**

1. திரிகூட ராசப்பர் குற்றாலத்தின் மீது பாடிய நூல்கள் யாவை?

   தலபுராணம் – மாலை – சிலேடை – பிள்ளைத்தமிழ் – யமக அந்தாதி.

2. கீழ்க்காணும் படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிந்து எழுதுக



   இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
   கெடுக உலகியற்றி யான்.

3. மதீனாவின் நகரம், மாளிகை குறித்து எழுதுக.

   மேருமலை – மதீனா – மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.
   அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி,
   பெருங்கடலொலிபோன்று – மதீனா – வீதிகள் பிரபஞ்சத்தைப் போன்று
   பரந்திருந்தன – அந்நகரில் இடைவெளியின்றி மாளிகள் நெருக்கமாக...

4. முல்லை நிலத்திற்குறிய மக்கள், விலங்கு, தெய்வம், உணவு குறித்து எழுதுக.

   மக்கள் – இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்
   விலங்கு – மான், முயல்

தெய்வம் – மாயோன்
உணவு – வரகு, சாமை, முதிரை.

**இ) குறுவினா எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி (உரைநடை) 3x2=6**

5. புன்செய் நிலத்திற்குரிய உரம் எது?
   காய்ந்த இலைச் சருகு
   ஆடு, மாடு – கால்நடைகளின் சாணத்தை எரிப்பதனால் – சாம்பல்

6. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கருத்து யாது ?

"சங்ககாலத்தில் தமிழகத்தில் தமிழ் ஆட்சிமொழியாக, பயிற்று மொழியாக இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது; தமிழகம் அப்போது பெற்றிருந்த சுதந்திரத்தால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் சமயம் வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும்..."

7. 'கேரளாந்தகன் கோபுரம்' எனப் பெயரிடக் காரணம் யாது?

பெரிய கோவிலின் கோபுரங்களில் உயரமானது – இராசராசன் 988ஆம் ஆண்டு சேரநாட்டை வெற்றி – போற்றும் வகையில்

8. மொழி எப்போது திடநிலையை அடைகிறது?

நான் விரும்பும் வகையில் ஒரு திரவ நிலையில் இருக்கும் பேச்சுமொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்று திடநிலையை அடைந்து விடுகிறது.

**ஈ) சிறுவினா எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி (செய்யுள்) 2x4=8**

9. அ) குறவஞ்சி – விளக்கம் தருக.
   ஆ) சிங்கி பெற்ற பரிசுப் பொருள்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

குறவஞ்சி – ஒருவகை இலக்கிய வடிவம்.
சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
பாட்டுடைத்தலைவன் – உலா – தலைவி காதல் ஓ குறத்தியிடம் குறி – பரிசில் பெறுதல்.
குறத்திப்பாட்டு – வேறுபெயர்.

சேலத்து – தலைவிக்குக் குறி – சிலம்பு
கலிங்க – தலைவி – தண்டை
பாண்டியனார் மகளுக்கு – பாடகம்
ஆண்டவர் குற்றாலர் சந்நிதியிலுள்ள பெண்களுக்கு – அணிமணிக்கெச்சம்
கண்டிய தேசத்தில் – காலாழி பீலி

10. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

- உலகமே கற்பொடியாகிவிடும்
- நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தல்
- தேவர்களுக்கும் மேன்மையான பொருள்

11. மேகத்திடம் கூறுவது போலத் தலைவி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப்பொருள் யாது?

தலைவி மேகத்திடம் உரைப்பது:
பொன்னென மலர்ந்த வேங்கை மலரை அணிந்து கொண்டிருக்கும் தோழியர்களுடன் மெல்ல மெல்ல நடந்து குறமகள் தினைப்புனம் காப்பாள்.

தழலை - தட்டை - ஒலி - பறவை ஓட்டி
அசோக இழைகளால் தழையாடை

இறைச்சிப் பொருள்
தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பது குறிப்பால் உணர்த்துவது.

12. "உற்றில வாய் ஒலி கொள்ளும் செவியென ஓதுகின்றாய்-இடம் சுட்டிப் பொருள் விளக்கம் அளிக்க.

நூல்-நீலகேசி
புத்த வாதச் சருக்கத்தில் 516வது பாடல்

<u>பொருள் விளக்கம்</u>:

காதுகள் ஒலியைக் கவரும் என்கிறாய் காடுகளால் ஒலியைக் கவர இயலாது. ஒரே நேரத்தில் தோன்றுகின்ற ஒளி ஒலியை நாம் ஒரு சேரப் பெறுவதில்லை ஒளியை முன்னரே காண்கிறோம்.; அதன் பின்னரே ஒலியைக் கேட்கின்றோம். ஆகவே, ஒலி தான் செவியை வந்தடைகிறது. செவி ஒலியை அடைவதில்லை.

**உ) சிறுவினா எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி (உரைநடை)**
**2x4=8**

8. நியூரான்களின் வலைப்பின்னலில் அடங்குபவை யாவை?
   வலப்பக்க மூளையில் செய்திகள் பதிவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து சுஜாதாவின் கருத்துகளை எழுதுக.

புத்திசாலித்தனம் - படைப்புணர்ச்சி - ஞாபகம் - தன்னுணர்வு.

வலது பாதி சரியில்லை -வீடுக்குப் போக - சட்டை போட்டுக்கொள்ள
கவிதை - படம் -நடனம் - நடிப்பது - போன்ற கலைகள் மேம்படுவது
வலது - ஆக்கிரமிப்பு உள்ளவர்கள் நடிகர்களாக, நடனக் கலைஞர்களாக...

9. தஞ்சைப் பெரிய 'கோவிலை எடுப்பித்தவர்கள்' பற்றிய கல்வெட்டில் கூறிய செய்தியை விரித்துரைக்க.

'நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க..."

10. திண்ணைப் பள்ளிக் கல்விமுறை - குறித்து எழுதுக.

19ஆம் நூற்றாண்ட்ன் இடைப்பகுதியில் தோற்றம்

“தெற்றிப்பள்ளிகள்” எனவும்
திண்ணைப்பள்ளி ஆசிரியர்களை - கணக்காயர்
ஆங்கிலேயர், திண்ணைப்பள்ளி, பாடசாலைகள், மதரஸாக்கள்,
மக்தாபுகள் - ‘நட்டுக்கல்வி’ என்று
தாமஸ் மன்றோ கூற்று (ஐரோப்பிய கல்விமுறையைக் காட்டிலும்...)

11. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

புதுச்சேரிக்குக் கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும்...
நஷ்டப்பட்ட திரவிய்டம் மீண்டும் கிடைத்தாற் போல
மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று
நீண்ட நாள் தவமிருந்து - புத்திர பாக்கியம்
தேவாமிர்தத்தைச் சுவைத்தது

**ஊ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி [நெடுவினா] 2x6=12**
**(செய்யுள், உரைநடை)**

12. கீழ்க்காணும் பாடலுக்குரிய அசையையும் அசைக்குரிய வாய்ப்பாட்டையும் வாய்ப்பாட்டிற்குரிய தளையையும் எழுதுக.

சீரிய நெற்றி எங்கே?
சிவந்தநல் இதழ்கள் எங்கே?
சூரிய விழிகள் எங்கே?
குறுநகை போன தெங்கே?
நேரிய பார்வை எங்கே?
நிமிர்ந்தநன் னடைதான் எங்கே?
நிலமெலாம் வணங்கும் தோற்றம்
நெருப்பினில் வீழ்ந்த திங்கே !

- கவியரசு. கண்ணதாசன்

13. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

மருந்து: மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உண்ணின் (உண்டதும் செரித்தும் உண்டால்...

மருத்துவர்: நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்பச் செயல்
(நோயையும் அதன் காரணத்தையும் நீக்கும் வழியையும் ஆராய்ந்து

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்
(நோயின் வயதையும் நோயின் அளவையும் மருத்துவத்தின் காலத்தையும் ஆராய்ந்து...

மருத்துவம்: உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.

(நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்து ஆளுநர் என்று மருத்துவம் நான்கு வழிகளில் அடங்கும்.

14. அ) தஞ்சைப் பெரிய கோவிலை இராசராசன் தான் கட்டினார் என்பதற்குச் சான்று எங்கே உள்ளது?

ஆ) கோவில்கள் ஏன் பெரிதாகக் கட்டப்பட்டன?

1888 – ஜெர்மனி அறிஞர் ஷுல்ஸ் – 6ஆண்டுகள் – கல்வெட்டு – படியெடுத்து – உறுதி.

ஹோவில் –வழிபடும் இடம்மட்டுமல்ல– இசை, நடனம்..– கலைகள் வளர்ப்பு
மக்கள் ஒன்று கூடும் இடம் ஆதலால் ,
மக்களுக்கான செய்திகள் – கல்வெட்டுகளாக
பஞ்சகாலத்தில் – தானியக்கிடயங்கு
கருவூலம்–மருத்துவம்–போர்க்களத்தில் படைவீரர்–தங்கும் இடம்.

15. ‘மரபுவழிக் கல்வி முறைகள்’ குறித்து எழுதுக.

- குருகுலக் கல்விமுறை
- திண்ணைப் பள்ளிக் கல்விமுறை
- உயர்நிலைக் கல்விமுறை

எ) மனப்பாடப்பகுதி 4+2=6

15. உண்டால் அம்ம… எனத்தொடங்கும் புறநானூற்றுப்பாடலை எழுதுக.

16. குறிப்பில்… எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர் !
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோந்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

நேரிசை ஆசிரியப்பா
– கடலூர் மாய்ந்த இளம்பெருவழுதி

குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

**பகுதி–ஆ**
**(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)**

**அ) பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 6x1=6**

17. தவறான இணையைத் தேர்க.

அ) மொழி+ஆளுமை=உயிர்+உயிர் ஆ) கடல்+அலை=உயிர்+மெய்
இ) தமிழ்+அறிஞர்=மெய்+ உயிர்

18. பைலட் (Pilot) என்கிற சொல்லுக்குரிய பழந்தமிழிலக்கியச் சொல் எது?

அ) பகலவன் **ஆ) வலவன்** இ) செல்வன்

19. குறிஞ்சித்திணைக்கான பாடல் வரிசை
அ. 1,3,5,7,... **ஆ. 2,8,12,18...** இ. 4,14,24,34...

20. வரவு+அறிந்தான் - எவ்வகைப் புணர்ச்சி
அ. பூப்பெயர்ப் புணர்ச்சி **ஆ. முற்றியலுகரப் புணர்ச்சி**
இ. குற்றியலுகரப் புணர்ச்சி

21. உடனிலை மெய்ம்மயக்ககத்திற்கு உரிய எழுத்துகள்?
**அ. 4** ஆ. 6 இ. 10

22. ‘நல்வினை’ - சரியான அசை பிரிப்பைக் கண்டறிக.
**அ. நேர் நிரை** ஆ. நேர் நேர் நேர்
இ. நேர் நேர் நிரை

34. முல்லை நிலத்திற்குரிய பறவை
அ. கிளி **ஆ. காட்டுக்கோழி** இ. மயில்

35. தொல்காப்பியம்
அ. சங்க நூல் ஆ. அறநூல் **இ. இலக்கண நூல்**

**ஆ) குறுவினா எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடையளி: 7x2=14**

23. நல்லாடை - புணர்ச்சி விதி காண்க.

நன்மை+ஆடை
ஈறுபோதல் - முன்னின்றமெய் திரிதல் - தனிக்குறில்... - உடல்மேல்...

24. அ) கொல்புலி- , ஆ) மாண்ட தவளை-, இ)கொல்புலி-, ஈ)பொற்சிலம்பு
- இலக்கணக்குறிப்பு எழுதுக.

அ) வினைத்தொகை, ஆ) பெயரெச்சம், இ) வினைத்தொகை,
ஈ) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

25. உண்டான், பெற்ற - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

உண்-பகுதி+ட்-இற.கால இடைநிலை+ஆன்-ஆண்பால் வி.மு.விகுதி.

பெறு-பகுதி (பெற்று) என ஒற்று இரட்டித்ட்ர்ஹப இற.காலம் காட்டியது + அ-பெயரெச்ச விகுதி.

26. தமிழில் கலைச்சொற்களின் இன்றியமையாமை யாவை?

காலத்திற்கேற்ப புதுப்பித்து - மருத்துவம், பொறியிய்டல், தொழில்நுட்ப அறிவியல் - தமிழ்வழியில் கற்க
தாய்மொழியிலான சிந்தனை-புதியன கண்டுபிடிக்க வழிவகுக்கும்

27. இறைச்சி - குறிப்பு எழுதுக.

உள்ளுரை போன்றே இறைச்சி என்பதும் அகப்பாடலில் வர்ர்fஉகின்ற மற்றொரு உத்தி. இதுவும் குறிப்புப் பொருளில் தான் வரும்.

28. தமிழாக்கம் தருக:

Looking at beauty in the world is the first step of purifying the mind.
உலக அழகைப் பார்ப்பதற்கு மனத் தூய்மையே முதல் படி.

29. வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

வளவனை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

வளவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

30. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் எது? அதனை வேறு எவ்வாறு கூறுவர்?
இயற்சீர் - வேறு, ஆசிரிய உரிச்சீர்.

31. Touch screen, Subsidy – கலைச்சொல்லாக்கம் காண்க.

இ) எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி 3x4=12

32.

பொருத்துக:

அ) அடி அகரம் ஐ ஆதல் - செங்கதிர் --ஆ
ஆ) முன்நின்ற மெய் திரிதல் - பெருங்கொடை--ஈ
இ) ஆதிநீடல் - பைங்கூழ்--- அ
ஈ) இனமிகல் - காரிருள்---இ

33. சொற்பொருள் பின்வரும் நிலையணி’யைச் சான்று தந்து விளக்குக.

“நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்” -

34. தமிழாக்கம் செய்க:

The zero ! one of the grandest creations of Indian genius. This is not known for certain that who discovered zero and when. This discovery is certainly one that has helped science to reach its current status.

‘சுழியம்’ , இந்திய மேதைகளால் கண்டுபிடிக்கப்பட்ட படைப்புகளில் ஒன்று . சுழியம் என்பது பற்றியும் அது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்பது பற்றியும் சிலருக்குத் தெரியாது. இந்தக் கண்டுபிடிப்பானது நிச்சயமாக அறிவியலை அட்க்ஹன் தற்போதைய நிலையை அடைய உதவியது.

35. இலக்கிய நயம் பாராட்டுக:

கீழ்க்காணும் பாடலில் பயின்று வந்துள்ள எதுகை மோனை, முரண், சந்தம் ஆகிய நயங்களைச் சுட்டுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்

கண்கள் இரண்டினில் ஒன்றைக் ஓ குத்தி
காட்சிக் கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வள்ர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்.
- பாரதியார்.

**எதுகை** - பெண்ணுக்கு - மண்ணுக்குள்ளே ; கண்கள் - பெண்கள்

**மோனை** - பெண்ணுக்கு - பேணி ; மண்ணுக்குள்ளே - மாதர்
கண்கள் - காட்சி ; பெண்கள் - பேதமை

**முரண்** - ஞானம் - மூடர் ; வளர்த்தல் - கெடுத்தல் ; அறிவு - பேதமை

**சந்தம்** - தனிச்சொல் பெற்று... சிந்துப்பா (செப்பலோசை)

36.

**இ) துணைப்பாடப்பகுதி வினாவிற்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக** **1x6=6**

37. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

உட்தலைப்புகள் - 1/2
முன்னுரை - 1
முடிவுரை -1
செய்திகள் - 3 1/2

முன்னுரை - (இளையராஜா) பக்கத்து வீட்டு நண்பன் - இசையின் ஈர்ப்பு - இசைத்தமிழுக்கு ஆற்றியவை - (ரகுமான்)ஆஸ்கர் தமிழர் - துள்ளல் இசை - முடிவுரை

38. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

உட்தலைப்புகள் - 1
செய்திகள் - 5

********